தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.
ஒ.மு.எண். 5036 /அ1/2018 நாள். .09.2018.

பொருள் : பள்ளிக்கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் – பள்ளி வாகனங்கன் பராமரிப்பு – அனுமதிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்திட அறிவுரை வழங்க தெரிவித்தல் – சார்பு.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.270 பள்ளிக்கல்வி (எக்ஸ் 2)த் துறை நாள்:22.10.2012.
2. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.3778/அ1/2016 நாள்06.08.2016 மற்றும் ந.க.எண்.3482/அ1/2012 நாள்:11.09.2012.
3. அரசு கடித எண்.12305/MS/2018–1 நாள்:02.08.2018
4. சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.R.ரவிகுமார் என்பவரின் மனு நாள்:27.05.2018.

பார்வை 1இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2இல் காணும் இயக்குநரின் செயல்முறைகளில் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் வாகனங்களின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விரிவான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4இல் காணும் மனுவில் பள்ளி வாகனங்கள் விடுமுறை காலங்களில் தனியார் சுற்றுலா வாகனமாக இயக்கப்படுவதாகவும், இதனால் பேருந்தின் பாகங்கள் தேய்மானம் அடைந்து விபத்து நேரிட வாய்ப்புள்ளதாகவும் மேலும், இது போன்ற நிகழ்வினை தவிர்க்கவும் மனுதாரர் கோரியுள்ளார்.

எனவே, பார்வை 1 மற்றும் 2 இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை தொடர்ந்து, பள்ளி வாகனங்களுக்கு, போக்குவரத்துத் துறையால் எதன் பொருட்டு சான்று வழங்கப்பட்டுள்ளதோ, அந்தப் பயன்பாட்டிற்கு மட்டும் பள்ளி வாகனத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி முதல்வர்களுக்கு சுற்றறிக்கையாக அறிவுறுத்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இவ்வறிவுரையினை பள்ளி நிர்வாகங்கள் பின்பற்றுவதை மாவட்டக் கல்வித் துறை ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்திடவும் தெரிவிக்கலாகிறது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்:
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நகல்
திரு.R.ரவிகுமார்,
த/பெ.ராமன்,
நெ.14, ஆதிகேசவன் தெரு, மயிலாப்பூர்,
சென்னை - 4

D:\ind\A1\common.docx